**சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை :** B. ராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் செவ்வாய்க்கிழமை
(2057 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 10 ம் நாள்)

**இடைநிலை மனு எண்.04/2026,**
**இடைநிலை மனு எண்.05/2026**
**அசல் வழக்கு எண்.116/2022**

ராஜமாணிக்கம்
த/பெ தொப்போடன் .... மனுதாரர் / வாதி

/ எதிர் /

ராபியாகவல்
க/பெ சிராஜ் .. எதிர்மனுதாரர் / பிரதி வாதி

இருமனுக்களும் இறுதியாக, கடந்த 13.03.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இருமனுக்களிலும், மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.சம்பத், அவர்கள் ஆஜராகியும், இருமனுக்களிலும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே. ரஞ்சித்குமார், அவர்கள் ஆஜராகியும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இருமனுக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாக பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்து, இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

**பொதுவான உத்தரவு**

**01)** அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியத்தை மறுதிறப்பு செய்ய வேண்டும் என்ற பரிகாரத்திற்காக உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன்கீழ் இ.ம.எண்.4/2026 மனுவும், அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் கூடுதல் வாய்மொழி சாட்சியங்களை விசாரணை செய்ய அனுமதிவேண்டுமென்ற பரிகாரத்திற்காக உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 16

விதி 1(2) ன் கீழ் இ.ம.எண்.5/2026 மனுவும், தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**<u>02) இ.ம.எண்.4/2026, இ.ம.எண்.5/2026 மனுக்களுக்கான பிரமாணப் பத்திரங்களின் பொதுவான சுருக்கம்:–</u>**

மனுதாரரால், கடனுறுதிச்சீட்டு அடிப்படையில் எதிர்மனுதாரரிடமிருந்து பணம் திரும்ப பெறுவதற்காக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ள எதிர்மனுதாரர் , மனுதாரரிடம் கடன் பெற்றுள்ளதையும், எதிர்மனுதாரர் வங்கி கணக்கில் மனுதாரர் பணம் வைப்பீடு செய்துள்ளதையும், தாவா கடனுறுதிச்சீட்டு ஆவணத்தில் உள்ள கையெழுத்துத்துக்களையும் மறுத்து வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார்.

கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையெழுத்திட்டுள்ள ஜெயசாம்ராஜ் என்பவர் மகாராஷ்டிராவில் உள்ளதால், அவரை மனுதாரர் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய முடியவில்லை. இந்நிலையில், மனுதாரரால், எதிர்மனுதாரருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதை நிரூபணம் செய்வதற்கு வாணியம்பாடி இந்தியன் வங்கி மற்றும் கனரா வங்கி கிளைகளின் அலுவலர்களை இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் முக்கிய சாட்சிகளாக விசாரணை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆகையால், மனுதாரர் தரப்பில் ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ள வாய்மொழி சாட்சியத்தை மறுதிறப்பு செய்யவும், மேற்குறிப்பிட்ட வாய்மொழி சாட்சியங்களை விசாரணை செய்யவும் அனுமதி வேண்டி, மனுதாரரால் தனித்தனியாக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>03) இ.ம.எண். 4/2026, இ.ம.எண்.5/2026, மனுக்களுக்கான தனித்தனியாக எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் பொதுவான சுருக்கம்:–</u>**

மனுச் சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, மற்றவற்றை மனுதாரர் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார். மனுக்களுக்கான தனித்தனியான பிரமாணப் பத்திரங்களில் மனுப் பரிகாரங்களுக்காக மனுதாரர் கூறியுள்ள சங்கதிகள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியவை கிடையாது.

தாவா கடனுறுதிச்சீட்டு, மோசடியானது என எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்காடப்பட்டு வருகிறது. மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியங்களை விசாரணை செய்ய இந்நீதிமன்றத்தால் போதுமான காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில், மனுவில் குறிப்பிட்டுள்ள வாய்மொழி சாட்சியங்கள் மனுதாரர் தரப்பு வழக்கிற்கு தேவையற்ற நபர்கள் ஆவார்கள்.

வழக்கு விசாரணையை இழுத்தடிப்பு செய்யும் கெட்ட எண்ணத்தில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளர். ஆகையால், அடிப்படை முகாந்திரம் இன்றி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

04) இம்மனுக்களை பொறுத்தவரையில் மனுதாரருக்கு இருமனுக்களிலும், மனுப் பரிகாரங்கள் கிடைக்கக்கூடியதா ? இல்லையா ? என்பது இந்நீதிமன்றத்தால் முடிவு காண வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

05) <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

இருமனுக்கள் தொடர்பான இந்நீதிமன்ற விசாரணையில், இருதரப்பிலும் எந்தவொரு வாய்மொழி சாட்சியமும், ஆவணச் சான்றுகளும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது.

மனுதாரர் பல்வேறு தேதிகளில் மொத்தமாக ரூ.6,00,000/—ம் பணத்தை எதிர்மனுதாரருக்கு கடனாக கொடுத்துள்ளதாகவும், அதுதொடர்பாக மனுதாரர் பெயருக்கு எதிர்மனுதாரர் கடனுறுதிச்சீட்டு ஒன்றை எழுதிக்கொடுத்துள்ளதால், மேற்படி தொகையை பின் வட்டியுடன் வசூலிப்பதற்காக எதிர்மனுதாரருக்கு எதிராக அசல்வழக்கினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

வழக்கு விசாரணையில் மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில், சாட்சி, சான்றாவணங்களை முன்னிறுத்தும் பொருட்டு, கடந்த 24.02.2025ம் தேதி முதல் 01.09.2025ம் தேதி வரை பல்வேறு தேதிகளில் இந்நீதிமன்றத்தால் சுமார் 15 வாய்தாக்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சுமார் ஆறு மாதத்திற்கு மேலான காலஇடைவெளியில், மனுதாரர் தரப்பில் வா.சா.1 ஆக மனுதாரர் ராஜமாணிக்கம் என்பவரும், வா.சா.2 ஆக லட்சுமணன் என்பவரும் இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளனர்.

மனுதாரர் தரப்பில் வா.சா.1 வாய்மொழி சாட்சியத்தின் மூலம் வா.சா.,ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பின்னர், மனுதாரர் தரப்பு வாய்மொழி சாட்சியம் முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பில் பி.சா.1 ஆக எதிர்மனுதாரர் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார்.

எதிர்மனுதாரர் தரப்பில், பிறவாய்மொழி சாட்சியங்களை விசாரணை செய்வதற்காக வழக்கு நிலுவையில் இருந்துள்ளபோது, மனுதாரர் தரப்பில், மீண்டும் வாய்மொழி சாட்சியங்களை விசாரணை செய்ய மனுதாரர் தரப்பு வழக்கினை மறுதிறப்பு செய்யவேண்டுமென இ.ம.எண். 2/2025 மனுவும், வாணியம்பாடியில் உள்ள இந்தியன் வங்கி மற்றும் கனரா வங்கி கிளைகளின் வங்கி மேலாளர்கள் ஆவணங்களை ஆஜர்படுத்த

வேண்டும் என இ.ம.எண்.3/2025 மனுவும், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி இருமனுக்களும் கடந்த 13.11.2025 மற்றும் 27.11.2025 ஆகிய தேதிகளில் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பு வாய்மொழி சாட்சியம் மறுதிறப்பு செய்யப்பட்டுள்ளது. பின், இந்நீதிமன்ற உத்தரவின்படி, வாணியம்பாடியில் உள்ள இந்தியன் வங்கி மற்றும் கனரா வங்கியின் மேலாளர்கள், வழக்கு தொடர்பான ஆவணங்களுடன் கடந்த 08.12.2025 மற்றும் 18.12.2025 ஆகிய தேதிகளில் இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகியுள்ளனர்.

மேற்கூறிய இரு தேதிகளிலும், வங்கி அதிகாரிகளை விசாரணை செய்யவும், ஆவணங்களை பெறுவது தொடர்பாகவும், மனுதாரர் தரப்பில் எந்தவொரு முன்னேற்ற நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பின்னர், மனுதாரர் தரப்பு வாய்மொழி சாட்சியம் முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரின் கணவர் சிராஜ் என்பவர் பி.சா.2 ஆக வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார்.

எதிர்மனுதாரர் தரப்பு வாய்மொழி சாட்சியம் முடிக்கப்பட்டுள்ள நிலையில், இருதரப்பு வாதத்திற்காக கடந்த 13.02.2026ல் வழக்கு விசாரணை இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்துள்ளது. இந்நிலையில், மீண்டும் இரண்டாவது முறையாக மனுதாரர் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை மறுதிறப்பு செய்ய வேண்டுமென இ..ம.எண்.4/2026 மனுவும், வாணியம்பாடியில் உள்ள இந்தியன் வங்கி மற்றும் கனரா வங்கி, கணக்காளர்களை விசாரணை செய்ய அனுமதி வேண்டுமென இ.ம.எண்.5/2026 மனுவும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியங்களை விசாரணை செய்வதறகாக ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் போதுமான காலஅவகாசம்

வழங்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் இரண்டாவது முறையாக மனுப்பரிகாரங்களுக்காக இம்மனுக்களை மனுதாரர் தாக்கல் செய்துள்ளது. சட்டப்படி ஏற்புடையது கிடையாது என எதிர்மனுதாரர் தரப்பில் கடும் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டுள்ளது.

வழக்கு கோப்பு ஆவணங்களை அனைத்தையும், மிக கவனமாக ஆராய்ந்து பார்க்கும்போது, அசல்வழக்கில் மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியங்களை முன்னிறுத்த இந்நீதிமன்றதால் ஏற்கனவே பல்வேறு வாய்தாக்களில், போதுமான காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்ற உண்மையை கண்டறிந்துகொள்ள முடிகிறது.

மனுதாரர் தரப்பில் ஏற்கனவே இதே பரிகாரங்களுக்காக இ.ம.எண்.2/2025, இ.ம.எண்.03/2025 ஆகிய மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அவைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்நீதிமன்ற உத்தரவுப்படி, மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டுள்ள வங்கி அதிகாரிகள் ஆவணங்களுடன் இந்நீதிமன்றத்தில், ஆஜராகியுள்ள நிலையில், அவர்களை விசாரணை செய்ய மனுதாரர் தரப்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அசல் வழக்கானது தற்சமயம், இருதரப்பு வாதத்திற்காக நிலுவையில் உள்ளது. இச்சூழ்நிலையில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுக்களில் சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நற்கூறுகள் எதுவும் இல்லை என்ற எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

மேற்கூறியவாறு இந்நீதிமன்றத்தால் விவரிக்கப்பட்டுள்ள காரணங்களினால், மனுதாரருக்கு மனுப்பரிகாரங்கள் வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது கிடையாது என முடிவு செய்யப்பட்டு, இருமனுக்கள் தொடர்பான பிரச்சனைக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**06 ) முடிவில்,** இ.ம.எண்.4/2026, இ.ம.எண்.5/2026 ஆகிய இருமனுக்களும் தள்ளுபடிசெய்யப்பட்டு, பொது உத்தரவிடப்படுகிறது. இருமனுக்களிலும் செலவுத்தொகைகள் எதுவும் இல்லை.

இப்பொது உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.03.24 12:58:08 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு**
**சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :—**

இல்லை

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.03.24 12:58:03 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.